
# இலக்கியப் பதிவுகளும் சமகாலப்போக்குகளும்

தொகுதி 2




பதிப்பாசிரியர்கள்

முனைவர் ச.இராஜலதா

முனைவர் சு.குமரன்

தலைப்பு : **இலக்கியப் பதிவுகளும் சமகாலப்போக்குகளும்**

பதிப்பாசிரியர்கள் : **முனைவர் ச.இராஜலதா,**
**முனைவர் சு.குமரன்**

பதிப்பாசிரியர்க் குழு : **முனைவர் கோ.மலர்விழி**
**முனைவர் இரா.பேபி**
**முனைவர் வே.சுமதி**
**முனைவர் கி.இராம்கணேஷ்**
**முனைவர் இரா.திவ்யா**

உரிமை : பதிப்பகத்தார்

நூல் அளவு : 13.5 செ.மீ x 21 செ.மீ

பக்கங்கள் : 430

விலை : ₹.400/-

**ISBN 978-81-909884-8-3**

முதல் பதிப்பு 2017

*Copyright © 2017*

*All Rights Reserved*

அச்சிட்டு வெளியிடுவோர் :

**நவநிலா மாருதி பப்ளிகேஷன்,**
22/64, விஜய் காம்ப்ளக்ஸ், பாலக்காடு ரோடு,
பொள்ளாச்சி, தமிழ்நாடு – 642001.
போன் : 04259 231814, செல் : +91-9942819942
மின்அஞ்சல் : navanilamaruthi@yahoo.co.in
இணையதளம் : www.navanila.com

| | | |
|---|---|---|
| 123 | கவிதாசனின் பார்வையில் குருவும் இயற்கையும்<br>முனைவர் க.முருகேசன் | 616 |
| 124 | இலக்கியத்தில் உளவியல் சிந்தனைகள்<br>முனைவர் எம்.மெஹ்முதா | 624 |
| 125 | கறிச்சோறு புதினமும் கௌரவக்கொலையும்<br>இர.மேனகாதேவி | 630 |
| 126 | சங்க இலக்கியங்கள் - காலப் பகுப்பில் மரங்களின் பயன்பாடு<br>த.மைவிழி | 637 |
| 127 | நாட்டுப்புற நம்பிக்கைகளில் அறிவியல் செய்திகள்<br>முனைவர்.மு.மோகனகாந்தி | 642 |
| 128 | மருதத்திணைப்பாடுபொருளும் சமுதாயச்சூழலும்<br>முனைவர் சி.யசோதா | 647 |
| 129 | இலக்கியங்கள் காட்டும் விருந்தோம்பல்<br>செ.யசோதா | 652 |
| 130 | பூமணி பிறகு நாவலின் உத்திகளும் மொழிநடையும்<br>திருமதி செ.யமுனாதேவி | 656 |
| 131 | ஆற்றுப்படை இலக்கியத்தில் முல்லை நில வாழ்வியல்<br>கி.ரஞ்சனி | 662 |
| 132 | சாண்டில்யனின் வரலாற்று நாவல்களின் நோக்கும் போக்கும்<br>தி.ரமேஷ்குமார் | 668 |
| 133 | திலகபாமாவின் 'சிறகுகளோடு அக்னிப்பூக்களாய்' கவிதைத் தொகுப்பில் கவிதைத் தடங்கள்<br>க.ராஜ்குமார் | 673 |
| 134 | ஐந்திணை எழுபதில் அகத்திணைச் செய்திகள்<br>முனைவர் ப. இராஜேஷ் | 677 |
| 135 | பித்தன் கவிதையில் மனிதவியல் பண்புகள்<br>ஜெ.ராஜு டேனியல் | 681 |

# கவிதாசனின் பார்வையில் குருவும் இயற்கையும்

முனைவர் க.முருகேசன்
தமிழ்த்துறைத்தலைவர்,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641 029.

கற்பனைப் பெருவெளியில் சிறகுகளை விரிக்காமல் நிகழ்கால நிஜத்தில் நின்று எதிர்காலத்தை எட்டிப் பார்க்கும் சிந்தனைகளைத் துளிர்க்கச் செய்ய வேண்டியது படைப்பாளியின் காலத்திற்கேற்ற கடமையாகின்றது. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என்ற திருவள்ளுவரின் வான்மறை வாசகத்திற்கேற்பப் பாங்குற வாழ்ந்து பார்போற்றும் சான்றோராய்த் திகழ்ந்த பெருமக்களின் வாழ்வைக் கருப்பொருளாக்கிக் கவிதை வடிப்பதில் சிந்தனைக் கவிஞர் கவிதான் முன்நிற்கின்றார். ஒரு மனிதனுடைய வாழ்க்கை அவன் தன்நலத்தோடு வாழும் போது சிறப்பிற்குரியதாக அமைவதில்லை. அதே சமயம் பிறருக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு சேவை மனப்பாங்குடன் தொண்டாற்றக் கூடியவர்கள் பெருமைக்கு உரியவராகிறார்கள். சிந்தனைக் கவிஞரின் எண்ணவயலில் உதித்தெழுந்த கவிதை மொட்டுக்கள் எதிர்காலச் சமூகத்திற்கான முன்னேற்றக் கருத்துக்களை ஆசானையும் இயற்கையும் முன்வைத்து எவ்விதம் விரியச் செய்கின்றன என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகின்றது.

**சான்றோரைப் போற்றுதல்**

"நான் ஒரு புத்தகத்தைப் படிக்கையில் என் உடல் குளுகுளுப்பானால் எந்த நெருப்பும் என்னைக் கதகதப்பாக முடியாது. ஏனெனில் அது கவிதை என்பது எனக்குத் தெரியும்" (If I read a book and it makes my whole body So cold no fire cab even warm me. I know that it is poetry) என்கிறார் எமிலி டிக்கென்சன் என்ற அமெரிக்கக் கவிஞர்.

இந்தியாவின் தெற்குமுனையாகிய இராமேஸ்வரத்தில் ஏழைக் குடும்பத்தில் மகனாகப்பிறந்த ஆ.ப.ஜெ.பாரதரத்னா டாக்டர் அப்துல்கலாம் உலகையே தன்பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்தவர். வறுமையின் கோரப் பிடியில் பிறந்திருந்தாலும் தன்னுடைய அறிவைக் கொண்டு கடிதின் முயன்று மிகப்பெரிய சாதனைகளை நிகழ்த்தி என்றென்றும் உலகம் அவரைப் போற்றுமாறு மரணமில்லாப் பெரு வாழ்வு பெற்றார். கலாம் அவர்களை ஞானகுருவாகவும், வழிகாட்டியாகவும் கொண்டுள்ள கவிஞர் கவிதாசன் 'கலாமுக்கு ஒரு கடிதம்' என்ற தலைப்பில் ஒரு கவிதை வடித்துள்ளார்.